**அ.வ.எண். 384/2022**
**வா.சா.1 : சத்தியபாமா**
**தேதி : 09.02.2026**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனக்கு 1976 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் 3 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது திருமணத்தின் போது எனது கணவர் கோயம்புத்தூரில் வேலை செய்தார். உங்கள் திருமணத்தை உங்கள் தகப்பனார் தான் முன்னின்று நடத்தி வைத்தார் என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு நீங்கள் கோயமுத்தூரில் கணவர் வீட்டோடு சென்று விட்டீர்கள் என்றால் சரியல்ல அரங்கம்பாளையத்தில் குடியிருந்தேன். உங்கள் திருமணத்திற்கு உங்கள் தகப்பனார் 50 பவுன் நகையும், ரூ.10000/– பணமும் ரொக்கமாக கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கொரு ஒரு மகன், ஒரு மகள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. உங்கள் பெயரில் கோயமுத்தூரிலும், கரூரிலும் அசையா சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தவிர பிரதிவாதிகளுக்கு வேறு சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. கோயமுத்தூரில் நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடு. வழக்குச்சொத்துக்களுக்குரிய பட்டா 2004 ஆம் வருடமே 1ம் பிரதிவாதி பெயரில் மாறிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் 2004 ஆம் ஆண்டு இறந்தவிட்டார். என் தகப்பனாருக்கு 2002 ஆம் ஆண்டே சுயநினைவு இல்லாமல் போய்விட்டது. வழக்குச்சொத்துக்கள் குறித்த வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் உங்கள் தகப்பனாருக்கு சுயார்ஜித சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் வீட்டை விட உங்கள் கணவர் வீடு வசதியானவர் என்று சொன்னால் இல்லை ஆமாம். 25.12.2003 ஆம் தேதியில் உங்கள் தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில்

ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல அது பொய்யாவணம். உயிலின் அடிப்படையில் உங்கள் தகப்பனார் இறந்த பிறகு அந்த உயில் நடைமுறைக்கு வந்தது என்று சொன்னால் சரியல்ல அது போலியான உயில் ஆகும். வழக்குச்சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டு 14.04.2022 ஆம் தேதி அவரது மகள் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் தகப்பனாருக்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து சுயநினைவில்லாமல் இருந்தார் என்று பொய்யாக சொல்கிறீர் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் உங்களுக்கு திருமணத்தின் போது சீர்வரிசைகள், ரொக்கம் கொடுத்துவிட்டதால் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை உயில் எழுதிவைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தில் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவித்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு ரங்கம்பாளையத்தில் குடியிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பெயரில் கோயமுத்தூரிலும், கரூரிலும் சொத்துக்கள் உள்ளதால் தான் உங்கள் தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.09 17:47:49 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.